# மர ஆலைத் தொழிலாளர்களின் வேலைச் சூழலும் நலன்களும் - அக்கரைப்பற்று பிரதேச சபையை மையப்படுத்திய ஒரு கள ஆய்வு

கே. எம். எம். பளீல் ஹக்[1*]

**ABSTRACT.** 2009ல் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட இலங்கையின் உள்நாட்டு யுத்தம் தொழிலாளர்கள் மத்தியில் அசைவையும், ஊழியத்துக்கான கேள்வியையும் அதிகரிக்கச் செய்துள்ளது. யுத்தத்தின் முடிவு, பாதைச் சோதனைச் சாவடிகளின் நீக்கம், போக்குவரத்துப் பாதைகளின் சீர்திருத்தம், பயங்கரவாதிகளின் கட்டுப்பாடுகள் இன்மை போன்ற காரணிகள் ஊழியத்தின் கேள்வி நிரம்பலில் சந்தைத் தொழிற்பாட்டில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. குறிப்பாக யுத்தம் முடிவடைந்ததை தொடர்ந்து கிழக்கு மாகாண மக்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட இயல்பு நிலைக்கான திரும்பல் காரணமாக யுத்தப் பிரதேசங்களில் வறுமையில் வாழ்ந்த தொழிலாளர்கள் தொழில் தேடி புலம்பெயர ஆரம்பித்துள்ளனர். மீள்கட்டமைப்பு, புனர்நிர்மாணம், துரித அபிவிருத்தி நடவடிக்கைகள், மஹிந்த சிந்தனையின் அமுலாக்கம் போன்றவற்றால் ஊழியத்துக்கான கேள்வி கிழக்கு மாகாணத்தில் அதிகரித்துள்ளது.

மீள்கட்டமைப்பு வேலைகளின் காரணமாக கட்டிட நிர்மாணத்துறைச் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியமர்த்துவதற்கான வீடுகளின் நிர்மாணம், அரச நிர்வாக மையங்களைப் புனரமைத்தல் போன்றவற்றால் மர ஆலைத் தொழிலுக்கு கேள்வி ஏற்பட்டது. அக்கரைப்பற்று பிரதேச சபை மர ஆலைத் தொழிலில் முன்னணி வகிக்கின்றது. அக்கரைப்பற்றிலிருந்து யுத்தத்தின் பின்னர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா போன்ற மாவட்டங்களுக்கு வீடு கட்டுவதற்கான மரங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றது. மரத்தொழிலுக்கான கேள்வி மர ஆலைத் தொழிலாளர்களுக்கு கேள்வியை ஏற்படுத்தியுள்ளது. மர ஆலைத் தொழில், சுற்றுச் சூழல் மாசடைதலை ஏற்படுத்துவதுடன் தொழிலாளர்களின் ஆரோக்கியத்தையும் பாதிக்கக்கூடிய ஒரு தொழிலாகவும் காணப்படுகின்றது. இந்த ஆய்வு மர ஆலைத் தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள், அவர்கள் வேலைசெய்யும் சூழலில் காணப்படும் பிரச்சினைகள் என்பவற்றை வெளிக்கொணர்வதுடன் அவற்றைத் தீர்ப்பதற்கு எத்தகைய வழிமுறைகள் பொருத்தமாக அமைந்துள்ளன என்பதை ஆராய்வதாகவும் அமைந்துள்ளது. கலந்துரையாடல்கள், நேரடி அவதானங்கள் போன்ற வழிகளில் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

மர ஆலைத் தொழிலாளர்களைப் பொறுத்தவரை அவர்களின் நலன்பேணும் ஏற்பாடுகள் தொழிற்சாலைகளில் குறைவாக உள்ளன. முதலுதவி வசதிகள், சுத்தமான குடிநீர், ஓய்வு, தூசியிலிருந்து பாதுகாப்பு, சம்பளம் போன்ற விடயங்களில் குறைவான வசதிகளே காணப்படுகின்றன. தொழிலாளர்களின் சட்டரீதியான பதிவு, ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் காப்புறுதி போன்ற விடயங்களில் தொழிலாளர்கள் புறக்கணிக்கபட்டுள்ளதுடன், அவர்களின் வேலை நேரமும் மிக அதிகமாகக் காணப்படுகின்றது. தொழிலாளர்களைப் பதிவு செய்தல், முதலுதவி உபகரணங்களை தயார் நிலையில் வைத்திருத்தல், ஊழியக் காப்புறுதித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல், நீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்றவற்றின் மூலம் தொழிலாளர்களின் நலன்களை அதிகரிக்கச் செய்யலாம். தொழில் திணைக்கள அதிகாரிகளின் கண்காணிப்பு போன்றவற்றின் மூலம் தொழிலாளர்களின் நலன்களை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

**Key words:** ஊழியர் புலம்பெயர்வு, மீள்குடியேற்றம், ஆரோக்கியப் பாதிப்புக்கள், ஊழியக் காப்புறுதி, தொழிலாளர் நலன்கள்.

---

* To whom correspondence should be addressed : faleelkm@seu.ac.lk

[1] சமூக விஞ்ஞானத் துறை, இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்